**வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : க. முனுசாமி, எம்.ஏ., எம்.எஸ்.சி., எம்.பி.ஏ., பி.எட்., எம்.பில்.,**
**ந.க.எண்: 650 /மாஓ1/ஒபக/2022, நாள்: 10.05.2023**

பொருள்: "நான் முதல்வன்" – கல்லூரி கனவு – அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல் (Career Guidance Cell) / ஆலோசனை வழங்குதல் – 12 ஆம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற பெறாத / பள்ளிக்குத் தொடர் வருகை தராத / பள்ளி செல்லா / பள்ளி இடைநின்ற மாணவர்கள் தமது உயர்கல்வியை தொடரத் தகந்த வாய்ப்பை உருவாக்குதல் – சார்ந்து – பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்களை (SMC RP) அனுமதித்தல் – தொடர்பாக.

பார்வை: தமிழ்நாடுபள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை–06 ந.க.எண்.ACE/118/ஆ3/CG–33/ஒபக/2023, நாள்:10.05.2023.

--------

"நான் முதல்வன்" – கல்லூரி கனவு – அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அமைக்கப்பட்டுவிருக்கும் பள்ளி அளவிலான உயர்கல்வி வழிகாட்டல் / ஆலோசனைக் குழு (Career Guidance Cell) 06.05.2023 முதல் செயல்பட்டு வருகின்றது. இதில் பள்ளி மேலாண்மை குழு கருத்தாளர்களின் (SMC RP) பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

மே 8 ஆம் தேதி அன்று பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் வெளியாகி உள்ள நிலையில், பள்ளியளவிலான உயர்கல்வி வழிகாட்டல் மைய உறுப்பினர்கள் இணைந்து அனைத்து மாணவர்களையும் உயர்கல்வியைத் தொடரச் செய்வதே இக்குழுவின் முக்கிய இலக்காகும்.

தேர்வு முடிவுகள் வெளியாகி உள்ள நிலையில், இடைநின்ற மாணவர்கள், தேர்ச்சி அடையாத மாணவர்கள், பல்வேறு காரணங்களால் தேர்வு எழுதுவதற்கு பள்ளிக்கு வராத மாணவர்கள் மற்றும் தேர்ச்சி பெற்றும் பள்ளியை தொடர்புக் கொள்ளாத மாணவர்களை உயர்கல்வியை தொடர கல்லூரிக்கு விண்ணப்பிக்க செய்வதற்கு முயற்சியின் ஒரு பகுதியாக அந்தந்த மாணவர்களின் இல்லங்களுக்கே சென்று அவர்களை தொடர்புக் கொள்ளவும் மாணவர்களின் உயர்கல்வியை சாத்தியமாக்கவும் பள்ளி மேலாண்மை குழு கருத்தாளர்கள் (SMC RP) தலைமையாசிரியர்களை அணுகும் போது அவர்களை அனுமதித்து அவர்கள் திறம்பட செயலாற்றுவதற்கு அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித்

தலைமையாசிரியர்களும் ஒத்துழைப்பு கொடுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம் – 6.

**பெறுநர்:**

அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல்:**

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மவாட்டம்
   அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. முதல்வர், DIET இராணிப்பேட்டை
   அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.